www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 7

தேர்வு எண் | | | | | | |

# முதல் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)-2023-24

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

14X1=14

**I. அ) சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர் ----------
அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க ஈ) நேதாஜி

2. தஞ்சாவூர் என்பதன் மரூஉ
அ) தஞ்சை ஆ) நெல்லை இ) எந்தை ஈ) குடந்தை

3. ஊர்வலத்தின் முன்னால் -------- அசைந்து வந்தது.
அ) தோரணம் ஆ) வானரம் இ) வாரணம் ஈ) சந்தனம்

4. 'யாண்டுளனோ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----
அ) யாண்டு + உளனோ? ஆ) யாண் + உளனோ? இ) யா + உளனோ? ஈ) யாண்டு + உனோ

5. ------ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.
அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்
இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன்

6. எஃகு – இச்சொல்லில் இடம்பெற்றுள்ள குற்றியலுகரத்தின் வகை.
அ) நெடில் தொடர்க் குற்றியலுகரம் ஆ) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
இ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஈ) வன்தொடர்க் குற்றியலுகரம்

7. வாழை, கன்றை ---------
அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது

8. நேற்று + இரவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) நேற்றுஇரவு ஆ) நேற்றிரவு இ) நேற்றுரவு ஈ) நேற்இரவு

9. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம்
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம்

10. சொல்லின் முதலில் மட்டுமே இடம்பெறுவது ---------
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம் இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம்

11. பொக்கிஷம் என்ற சொல் குறிக்கும் பொருள்.
அ) அழகு ஆ) செல்வம் இ) மிகுதி ஈ) பெரும்பரப்பு

12. 'அஞ்சு' என்பது
அ) முதற்போலி ஆ) முற்றுப்போலி இ) இடைப்போலி ஈ) கடைப்போலி

13. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும் இத்தொடரில் உள்ள 'ஐந்து' என்பதன் தமிழ் எண் ------
அ) அ ஆ) உ இ) க ஈ) ரு

14. 'மெத்தை வீடு' என்று குறிப்பிடப்படுவது
அ) மெத்தை விரிக்கப்பட்ட வீடு ஆ) படுக்கையறை உள்ள வீடு
இ) மேட்டுப் பகுதியில் உள்ள வீடு ஈ) மாடிவீடு

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5X2=10

15. முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?

16. வழக்கு என்றால் என்ன?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

17. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.

18. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

19. வாழும் நெறி யாது?

20. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?

21. மகரக்குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

22. மொழியின் இரு வடிவங்கள் யாவை?

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4X3=12

23. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

24. 'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

25. புலிகள் குறித்த நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளில் மூன்றினை எழுதுக.

26. இயற்கையைப் பாதுகாக்க உங்க பொறுப்புகள் எவையேனும் மூன்றினை எழுதுக.

27. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?

28. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

IV. அடிமாறாமல் எழுதுக. 3+2=5

29. "அன்பும் அறனும்" எனத் தொடங்கி, 'தேன் மொழியாம்.' என முடியும் எங்கள் தமிழ் பாடல்.

30. "இயற்றலும்" என தொடங்கும் திருக்குறள்.

V. விடையளிக்கவும். 2X4=8

31. அ) காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?

32. அ) வ.உ. சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்.

33. ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 1X6=6

நான் விரும்பும் தலைவர்

(அல்லது)

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5X1=5

34. இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.

செடி பாய்ந்த நீர்

35. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

சிறுவன் x ________

36. கலைச்சொல் தருக.

Island -

37. தொகைச் சொல்லை விரித்து எழுதுக.

முக்கனி

38. என் பெயர் மூன்று எழுத்துகளைக் கொண்டது.

முதலெழுத்தை நீக்கினால் மறைப்பேன்.

இரண்டாம் எழுத்தை நீக்கினால் குரைப்பேன்

மூன்றாம் எழுத்தை நீக்கினால் குதிப்பேன். நான் யார்? ________



Kindly send me your study materials to padasalai.net@gmail.com